பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 08 2024 6 30

சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வயநாடு நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட கேரள மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. வங்கி நடைமுறை சட்டத்திருத்தங்கள் விரைவில் கொண்டுவரப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
3. கிராமப்புற மாணவர்கள் குடிமைப்பணி தேர்வுகளில் அதிக அளவில் தேர்ச்சிபெற வேண்டுமென்ற தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கேட்டுக் கொண்டுள்ளார்.
4. தமிழகத்தில் மலை கிராமங்களில் இருசக்கர ஆம்புலன்ஸ் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
5. தமிழகத்தில் நீலகிரி, கோவை, நாமக்கல், பெரம்பலூர் திருச்சி மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.,

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டப்பின் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை பிரதமர் திரு நரேந்திரமோடி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

**Meppadi** செண்ட் ஜோசப் பள்ளி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பெற்றோரை இழந்த இரண்டு மாணவர்கள் உட்பட பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் பிரதமர் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அங்குள்ள மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து அவர் ஆறுதல் தெரிவித்தார்.

முன்னதாக சூரமலை, முண்டகை பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்.

அவருடன் கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனும் சென்றிருந்தார்.

அந்த பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து அதிகாரிகள் பிரதமரிடம் விளக்கிக் கூறினர்.

50 நிமிடத்திற்கு மேல் சூரல்மலையைப் பார்வையிட்ட பிரதமர், ராணுவ அதிகாரிகள், சிறப்பு மீட்புப்படையினர், தேசிய பேரிடர் மீட்புப்படையினர் உள்ளிட்டோரையும் சந்தித்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு தரை வழியாகவும், வாகனம் மூலமாகவும் திரு நரேநதிரமோடி சென்று பார்வையிட்டார்.

பிரதமருடன் மத்திய இணை அமைச்சர் திரு சுரேஷ் கோபியும் சென்றிருந்தார்.

பின்னர் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பிரதமர். கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்த பாதிப்பு குறித்து கேரள அரசின் விரிவான அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மாநிலத்துக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறினார்.

நிலச்சரிவு ஏற்பட்ட நாளிலிருந்து அனைத்து மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளையும் தாம் தொடர்ந்து கண்காணித்து வந்ததாகவும், பாதிப்பிலிருந்து மீள்வதற்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு செய்து வந்ததாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வயநாடு பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களை தாம் நேரில் சந்தித்தது குறித்து கூறிய பிரதமர், ஆயிரக்கணக்கான குடும்பங்களின் கனவுகள் இந்த நிலச்சரிவினால் சிதைந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எதிர்காலத்திற்கு தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்றும் திரு நரேந்திரமோடி கூறினார்.

**[]<<<>>>[]**

வங்கி நடைமுறை சட்டத்திருத்தங்கள் விரைவில் கொண்டுவரப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தில்லியில் இன்று ரிசர்வ் வங்கி வாரிய உறுப்பினர்களிடையே நடப்பு ஆண்டு பட்ஜெட்டுக்கு பிந்தைய ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த வங்கி நடைமுறை சட்டத்திருத்தங்களில் கூட்டுறவு வங்கித் துறையை சீரமைப்பதற்கான பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருப்பதாகக் கூறினார்.

வங்கி கணக்குகளுக்கான வாரிசுதாரர் நியமனத்திலும், வாடிக்கையாளர்களுக்கு உகந்த வகையில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்றும், இதனால் உண்மையான நியமன வாரிசுதாரர்கள் உரிய பலன்களை பெற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

வங்கிகள் ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதி மற்றும் மாத இறுதியில் கணக்குகள் குறித்த விவரங்களை சமர்ப்பிக்கும் வகையில் திருத்தங்கள் கொண்டுவரப்பட உள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

[]<<<>>>[]

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இதற்கான யாத்திரையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மக்கள் இயக்கமாக இது உருவெடுக்க வேண்டும் என்று பிரதமர் அழைப்பு விடுத்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று தொடங்கிய இந்த இயக்கம், வரும் 15-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக திரு நட்டா தெரிவித்தார்.

[]<<<>>>[]

கிராமப்புற மாணவர்கள் குடிமைப்பணி தேர்வுகளில் அதிக அளவில் தேர்ச்சிபெற வேண்டுமென்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவையில் குடிமைப் பணி தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பாராட்டு விழாவில் பங்கேற்று பேசிய அவர், ஏழை எளிய மாணவர்கள் குடிமைப்பணி தேர்வுகளில் அதிகம் தேர்ச்சிபெற வேண்டுமென்றும், கிராமப்புறங்களில் உள்ள சூழ்நிலைகளை அவர்கள் தெரிந்து வைத்திருப்பதால் ஊரக மேம்பாட்டுக்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

குடிமைப்பணியில் வெற்றிபெற்றவர்கள் நாட்டிற்காக முழு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்ற வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தங்கள் உடல் நலமும், மன நலனும் ஆரோக்கியமாக பராமரிக்க வேண்டுமென்றும், சுய ஒழுக்கமும், மன வலிமையும் சிறப்பாக கடமையாற்ற அவசியமானவை என்றும் ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பழங்குடியினர் வசிக்கும் மலை கிராமங்களுக்கு எளிதில் செல்லும் வகையில் இருசக்கர ஆம்புலன்ஸ் சேவை விரைவில் தொடங்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் 700 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை கட்டுமான பணிகளை பார்வையிட்ட அவர், இந்த மருத்துவமனையின் ட்டுமான பணிகள் முடிவடையும் தருவாயில் இருப்பதாகவும். இன்னும் இரண்டு மாதங்களில் திறக்கப்படும் என்றும் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழக அரசு போக்குவரத்துக் கழகத்தில் விரைவில் மின்சார பேருந்துகள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிய பேருந்துகள் தொடக்க விழாவில் பேசிய அமைச்சர், பேருந்துகளின் வசதியை மேம்படுத்தவும், புதிய பேருந்துகளை பயன்பாட்டுக்கு கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்,

சென்னையில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் பயன்பெறும் வகையில் சாய்வுதள பேருந்துகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருவண்ணாமலையிலிருந்து சென்னை, சேலம், காஞ்சிபுரம் உள்ளிட்ட ஊர்களுக்கு பல்வேறு வழித்தடங்களில் 32 பேருந்துகளையும் திரு சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில் ஈரோடு, தருமபுரி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி உள்ளிட்ட --- மாவடடங்களின் ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ---45 செகண்ட்*

**[]<<<>>>[]**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் சிறு தானியங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் இரண்டு நாள்

விவசாய கண்காட்சியை ஆட்சியர் திருமதி சரயு இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

நெல்லை மாநகராடசியின் ஏழாவது மேயராக திரு ராமகிருஷ்ணன் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழில் முனைவோர் மானியக் கடன்பெற வரும் 14-ஆம் தேதி நடைபெறவுள்ள முகாமில் பங்கேற்று தொழில் கடனுக்கு விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

அரக்கோணம் தேசிய பேரிடர் மீட்புப் படையில் உள்ள மோப்ப நாய்களுக்கு மக்கள் கூட்டத்தைப் பார்த்தால் பயப்படாமல் இருப்பதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டத்தில் தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணி இன்று நடைபெற்றது,

[]<<<>>>[]

பெரம்பலூர் மாவட்டத்தில் காவல்துறையில் தொலைத் தொடர்பு பிரிவில் பயன்படுத்தப்பட்ட மின்கலன் உள்ளிட்ட 646 பொருட்கள் வரும் செவ்வாய்கிழமை பொது ஏலம் விடப்படும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய அணி இன்று புதுதில்லி திரும்பியது.

விமான நிலையத்தில் இந்திய அணியினருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று நடைபெற்ற மல்யுத்தப் போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Ritika** காலிறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார்.

ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இதுவரை ஒரு வெள்ளி ஐந்து வெண்கலம் உள்ளிட்ட ஆறு பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 69-வது இடத்தில் உள்ளது.